அந்த 4 ஏரிகளுக்கும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, மதகுகளைச் சீரமைப்பது, கால்வாய்களைச் சீரமைப்பது போன்ற பணிகளை இந்த ஆண்டு அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 108, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

108--

தனி விற்பனைக்குழு அமைத்தல்

**52071--திருமதி. கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிதம்பரனார் மாவட்டத்திற்கென்று தனி விற்பனைக் குழு அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரனார் மாவட்டத்திற்கென்று தனியே விற்பனைக்குழு ஏற்படுத்துவது தொடர்பாக, விரிவாக ஆய்வு செய்து, தேவையை அறிந்து, நிதி நிலைகளையும் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 85 இலட்சம் டன் விவசாய விளை பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில், 5, 6 சதவீதம் மட்டுமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனைக்கு வருகின்றன. 8 சதவீதம் உற்பத்திப் பொருட்களாவது இந்த விற்பனைக் கூடங்களுக்கு வந்தால் நல்லது. 1994-95-ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையினுடைய மதிப்பீட்டுக் குழு சிதம்பரனார் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது அங்கே விவசாயிகளும், வியாபாரிகளும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள், சிதம்பரனார் மாவட்டத்திற்கு என்று தனி விற்பனைக் கூடம் அவசியம் வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்தார்கள், அந்த அடிப்படையிலே சிரம்பரனார் மாவட்டத்திற்கு என்று தனியே விற்பனைக் குழு அவசர அவசிய உணர்வோடு அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, இதே போன்று விற்பனைக் குழு இல்லாத இடங்களில், மற்ற மாவட்டங்களிலும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் இரண்டுக்கும் பொதுவாக திருநெல்வேலியில் ஒரு விற்பனைக் குழு நன்கு செயல்பட்டு வருகிறது. புதிய மாவட்டங்களை நம்முடைய பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிரித்து வருகிறார்கள். இதன் அடிப்படையில் தென்னாற்காடு மாவட்டம், வடாற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, புதிய இடங்களாக திருவண்ணாமலை, விழுப்புரம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்கு புதிய விற்பனைக் குழு அமைக்கப்பட்டு வருகிறது. சிதம்பரனார் மாவட்டத்திற்கும் விரிவான ஆய்வு செய்து, அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் விற்பனைக் குழு கட்டுப்பாட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட எண்ணிக்கை, பணியாளர்கள் விவரம் மற்றும் வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் புதிய விற்பனைக் குழு ஏற்படுத்த அரசு ஆய்வு செய்யும். தமிழகத்தில் எல்லா மாவடங்களிலும் விற்பனை குழு நன்கு செயல்பட்டு வருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, வேளாண்மை விற்பனைக் குழு சார்பில் விவசாயிகள், வியாபாரிகள் ஆகியோருடைய வசதிகளை முன்னிட்டு பெரிய வேளாண் விளை பொருள் விற்பனைக் கூடங்களில் வங்கிக் கிளையை துவக்குவதற்கும், வேளாண்மை விற்பனைக் குழு சார்பில் வேளாண்மை விற்பனைக் குழு வளாகம் அமைப்பதற்கும் அரசு ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே தமிழக முதல்வருடைய ஒப்புதலோடு ஓர் அறிவிப்பை நான் வெளியிட்டிருக்கிறேன். பொள்ளாச்சியிலே ஒரு வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஈரோட்டிலே ஒரு வணிக வளாகம் உருவாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். மதுரை மாவட்டத்திலே ஒரு வணிக வளாகம் உருவாக்கப்படும் என்பதை தெரிவித்திருக்கிறேன். எனவே, போதிய அளவிற்கு அனைத்து வசதிகளையும் பெருக்குவதற்கு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதனைப் போல உழவர்களுடைய விளை பொருட்கள் இந்த விற்பனைக் குழுவிற்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு புதிய திட்டத்தை, உழவர்களுக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய

இன்சூரன்ஸ் திட்டத்தை சென்ற ஆண்டு நவம்பர் முதல் தேதியிலிருந்து அங்கே செயல்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *109*, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

109--

கிராமங்களில் பால் உற்பத்திக் கழகம்

79957*--திரு. ப. **கலியபெருமாள்:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியில் பால் வளத்தைப் பெருக்கக் கூட்டுறவு பால் உற்பத்திக் கழகம் கிராமங்களில் அமைத்து, ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்பட்டோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவையாறு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றது. மேலும் *10* புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், அங்கு செயல்படாத நிலையில் உள்ள *6* பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை புதுப்பிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இதனால் ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தினர்கள் மேற்படி சங்கங்களில் உறுப்பினர்களாகி அதன் மூலம் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறலாம்.

முற்பகல் *10–50*

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்களின் வாழ்க்கைவளம் சிறக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், கிராமப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் வளம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் கறவை மாடுகள் வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்தார்கள். ஆனால், மீண்டும் ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏழை எளியவர்களுக்கு, விவசாயிகளுக்கு பால்